
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1260

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## ‘மைனாரிட்டி’ தி.மு.க.

**மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா**

72

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்



# கழகக் களங்களில் இஸ்லாமியர்கள்!

தி.மு.கழகத்தின் தொடக்ককாலம் என்பது, நெருப்பாற்றில் எதிர்நீச்சல் போடுவது போன்ற கொந்தளிப்பான காலகட்டம். அண்ணாவின் ‘ஆரிய மாயை’ நூலுக்குத் தடை, எங்கு பார்த்தாலும் 144 தடை உத்தரவு எனக் கழகத்தின் இயக்கத்தை முடக்க எண்ணற்ற முயற்சிகள் அன்றைய ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் எதற்கும் அஞ்சாமல், ஜனநாயக நெறிப்படி கழகத்தின் ஆர்ப்பாட்டங்கள் அவற்றுக்கு எதிராக அமைந்தன. குறிப்பாக, 1951-இல் சென்னை வந்த அன்றைய ஒன்றிய அமைச்சர் ராஜாஜிக்கு, கழகத்தின் சார்பில் கருப்புக்கொடி காட்டும் போராட்டம் நடைபெற்றது. அன்றைய ஆர்ப்பாட்டத்தில், கழகத்தினர் எண்ணற்றோர் காவல் துறையின் மூர்க்கத்தனமான தடியடிக்கு ஆளாகினர்.

மண்ணடி ஷெரீஃப், மண்ணடி எம்.ஏ.ரஸாக், எம்.எஸ்.எம்.மொகய்தீன், எம்.எஸ்.காதர், இப்ராஹிம் போன்ற முஸ்லிம்களும் காவல் துறையின் கொடுந்தாக்குதலுக்கு ஆளானவர்கள் பட்டியலில் இருந்தனர். மூர் மார்க்கெட் ஹெச்.அப்துல் ஹமீத் கான் கைதுசெய்யப்பட்டார். அதுமட்டும் அல்ல, 1958-இல் சென்னையில் நேருவுக்கு எதிரான கருப்புக் கொடி போராட்டத்தில் மொய்தீன் பிச்சை உயிரையே இழக்க நேர்ந்தார் என்பதையும் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம்.

மும்முனைப் போராட்டம், விலைவாசி உயர்வுப் போராட்டம் என அனைத்துக் களங்களிலும் இஸ்லாமியர்கள் இல்லாத களம் ஒன்றில்லை என்ற நிலைதான் அன்றைக்கு இருந்தது. தி.மு.க.வின் உடன்பிறப்பாக ஒவ்வொரு போராட்டத்திலும் இஸ்லாமியர்கள் பங்கெடுத்தனர் என்பதற்கு, எண்ணற்ற வரலாற்றுச் சான்றுகள் கொட்டிக் கிடக்கின்றன. அவற்றில் சிலவற்றை ஆய்வாளர் கோம்பை அன்வர், ‘காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு’ நூலிலும் குறிப்பிட்டுள்ளார். அதில் குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய போராட்டக் களம் ஒன்று உண்டென்றால், அது இந்தி எதிர்ப்புப் போராட்டக்களம்.

### ஒவ்வொரு ஊரிலும்...

1952-இல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் மீண்டும் தமிழ்நாட்டில் உருவானபோது, 1938-இல் முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் முன்னின்ற முஸ்லிம்கள் இதிலும் அண்ணாவின் தலைமையின்கீழ் அணிவகுத்து, ஆதிக்க இந்தியை வீழ்த்த முகம் கொடுத்தனர். குறிப்பாக, கடையநல்லூரில் பு.ச.முகமது, மேட்டுப்பாளையத்தில் கே.கே.மொகமத் காசீம், சிதம்பரத்தில் ரஷீத், திருவாரூரில் எம்.ஏ.கரீம் மற்றும் ஈ.காதர் பாட்சா, திண்டிவனத்தில் அப்துல்லா, மன்னார்குடியில் எம்.பி.சக்கரியா, பொட்டல்புதூரில் எம்.அகமது, ஓ.ஏ.முகம்மது, நெய்னா முகம்மது, எம்.எஸ்.கனி, எஸ்.காதர் மைதீன், கோவையில் சி.எம்.அனீபா, எம்.அனீபா, மதுரையில் பி.சி.யாகூப், மா.நா.மைதீன், சி.எம்.தீன், காரைக்குடியில் முகமது அலி, சேரன்மாதேவியில் எஸ்.எம்.காதர், எம்.பி.மொகைதீன், எம்.ஹனீபா, கே.புகாரி, எம்.முகம்மது, கே.பி.பக்கீர் ஷா, திருநெல்வேலியில் எஸ்.எம்.மொன்னா முகம்மது, வி.கே.முகைதீன், சே.கா.யூஷுஃப், எ.எம்.உசேன், ரஹமத்துல்லா என ஊர் ஊருக்குப் பட்டியல் விரிகிறது.

1961-இல் ஈ.வெ.கி.சம்பத் திராவிட முன்னேற்றக் கழகத்தை விட்டு விலகி, ‘தமிழ் தேசியக் கட்சி’ தொடங்கியபோது, தி.மு.கழகத்திற்காக ஆதரவு திரட்டுவோர் பட்டியல் ஒன்றை ‘திராவிட நாடு’ இதழில் வெளியிட்டார் பேரறிஞர் அண்ணா. 250 பேர் கொண்ட அந்தப் பட்டியலில் 25 பேர் இஸ்லாமியர்கள். சாதிக் பாட்சா, நாகூர் ஹனீபா, மேத்தா, தஞ்சை அன்சாரி போன்ற கழகத்தில் செல்வாக்குமிக்க நபர்கள் இப்பட்டியலில் இருந்தனர்.

1965-இல் மீண்டும் இந்தி எதிர்ப்புப் போராட்டம் வெடித்தபோதும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் உடன்பிறப்புகளாக எண்ணற்ற இஸ்லாமியர்கள் அறவழிப் போராட்டத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். போராட்டத்தில் ஈடுபடுவது என்பதுடன், தங்களால் இயன்ற வழிகளில் எல்லாம் தி.மு.கழகத்தின் இந்தி எதிர்ப்புப் போருக்குத் துணை நின்றனர். போராட்டத்திற்குத் தேவையான கருப்புத்துணிகள் தயார் செய்து கொடுப்பது, போராட்டத்தில் பங்கேற்று, சிறை மீண்டு வந்தவர்களை வரவேற்பது என இஸ்லாமியர்கள், தமிழர் ஒருமைப்பாட்டோடு நீட்டிய ஆதரவுக்கரம், தி.மு.க. உடனான பிணைப்பை மேலும் வலுப்படுத்தியது.

### நள்ளிரவில் வரவேற்பு

குறிப்பாக, ஜனவரி 1, 1965 அன்று இந்தியை எதிர்த்து சிறைக்குச் சென்று விடுதலையான 15 பேருக்கு, சிவகாசி புகைவண்டி நிலையத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது. அதுவும் நள்ளிரவு இரண்டு மணிக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. சிறை மீண்டு வந்தவர்களை, சிவகாசி நகரக் கழகத்தின் சார்பில் பொருளாளர் எஸ்.ஏ.ரசாக் மாலை அணிவித்து வரவேற்றார். மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட இரட்டைக் குதிரைவண்டிகள் இரண்டிலும், மறியலில் ஈடுபட்ட இந்தி எதிர்ப்பு வீரர்கள் அமர்ந்து வர, நகரச் செயலாளரின் முன்னிலையில் ஊர்வலம் நகரின் முக்கிய தெருக்கள் வழியே சென்றது. முஸ்லிம் நடுத்தெருவில் ஊர்வலம் வரும்போது, தாய்மார்கள் மறியல் வீரர்களை வாழ்த்தி மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்தனர். இந்த செய்தி ‘முரசொலி’ நாளிதழிலும் பதிவாகி உள்ளது.

இந்தி எதிர்ப்புப் போராட்டக்காலம் போலவே, இஸ்லாமியர்கள் தங்கள் உறுதிப்பாட்டை வெளிக்காட்டிய மற்றொரு முக்கியக் காலகட்டம் எமர்ஜென்சி காலகட்டம். 1976-இல் அவசரநிலைப் பிரகடனத்தை எதிர்த்தமையால், கலைஞர் தலைமையிலான கழக அரசு கலைக்கப்பட்டது. கழகத்தின் முக்கிய நிர்வாகிகள் பலரும் மிசா சட்டத்தில் கைதுசெய்யப்பட்டு, சிறைகளில் பல இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டனர். அதில், நமது இன்றைய கழகத் தலைவரும் ஒருவர். அவருடன் சேர்ந்து, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அ.அ.ஜின்னா போன்ற பல இஸ்லாமியர்களும் மிசாவில் கைது செய்யப்பட்டனர் என்பது வரலாறு. கழகத்தின் வரலாற்றுக் களங்கள் எதைத் தொட்டாலும் அதன் வரலாற்றுப் பக்கங்களில் இஸ்லாமியர்கள் இல்லாமல் நிரம்பியதில்லை என்பது தி.மு.க.வுக்கும் இஸ்லாமியர்களுக்குமான கொள்கைப் பந்தத்தின் மிக முக்கிய மைல்கல். இன்றைய GENZ கூட்டங்கள் வரை அந்த இணைப்பும் பந்தமும் நீடிக்கிறது.

...நீளும்

> “கழகத்தின் வரலாற்றுக் களங்கள் எதைத் தொட்டாலும், அதன் வரலாற்றுப் பக்கங்களில் இஸ்லாமியர்கள் இல்லாமல் நிரம்பியதில்லை.”

## பெண்களின் அரசியல் அறிவைக் கேலிசெய்யும் த.வெ.க.!

‘தேர்தலுக்கு முன்பும் தேர்தலுக்குப் பின்னரும் த.வெ.க. கூட்டங்களில் கலந்துகொள்ளும் பெண்கள், இளைஞர்களின் உணர்ச்சி வெளிப்பாடுகளை அரசியல் அளவுகோலாகக் கொண்டு, ஒட்டுமொத்த இளந்தலைமுறையினர் மனநிலை இதுதான் என ஊதிப்பெருக்குவது அரசியல் சதி’ எனச் சமூக வலைதளங்களில் பலரும் கண்டனம் தெரிவிக்கின்றனர்.

சுயமரியாதை உணர்வும் சமூகப் பொறுப்பும், பொருளாதார தன்னிறைவும் அரசியல் விழிப்பு உணர்வும், கொண்டவர்களாகப் பெண்களை உருவாக்குவதுதான் பொறுப்புள்ள அரசியல் கட்சியின் கடமையாகும். தேர்தலுக்கு முன்பு, ‘ரூட் மாஃபியா’ உருவாக்கிய ரசிகர் அலையைப் போலவே, ஆட்சிக்கு வந்த பின்னும், பெண்களை அரசியலறிவு அற்றவர்கள் என்கிற தோற்றத்தை உருவாக்கிவருகிறது, த.வெ.க.

மகளிர் விடியல் பேருந்து திட்டத்தினைத் தொடர்வதில், ஆளும் அரசுக்கு உருவாகியுள்ள குழப்பம், த.வெ.க. நிர்வாகிகளின் மீது தினந்தோறும் எழும் பாலியல் வன்முறை வழக்குகள் ஆகியவற்றை எதிர்கொள்ள முடியாத நிலையில், பெண்கள் கண்மூடித்தனமாக விஜய்யை ஆதரிக்கிறார்கள் என்கிற போலி அடையாளத்தை ‘ரூட் மாஃபியா’ உருவாக்கிவருவதாக, பெண்ணியச் செயல்பாட்டாளர்கள் குறிப்பிடுகின்றனர். ‘பெண்கள் அரசியல் பகுத்தறிவற்றவர்கள்’ என த.வெ.க. நிகழ்த்திக் கொண்டிருக்கும் வன்முறை, வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டும்’ என்கின்றனர்.

தமிழ்நாட்டுப் பெண்களின் அரசியல் விழிப்பு உணர்வையும் தன்மானத்தையும், ரசிகர் கூட்டத்தில் நிகழ்ந்த சில காட்சிகளால் வரையறுக்க முடியாது. ரசிகர் உணர்ச்சிக்கும் சமூகத்தின் அரசியல் முதிர்ச்சிக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை உணர்ந்துகொள்ளும் காலம் வரும்.

## ஃப்ளாஷ்பேக்



சூர்யா ராஜகோபால்



### திருப்புமுனை தந்த மாநாடு!

என் தாத்தா ‘பண்ணை’ என்.ராஜகோபால் அவர்கள், கழகத்தின் தொடக்ககால உறுப்பினர். 1952-இல் பாளையங்கோட்டையில் கல்லூரிப் படிப்பு முடித்த பின்னர், கழகத்தில் இணைந்து செயல்பட்டவர். 1953-இல் பொதுக்குழு உறுப்பினரானவர். இந்தப் புகைப்படம் 2.10.1966 அன்று, வத்தலகுண்டு செல்லையா செட்டியார் திடலில் நடைபெற்ற மாவட்ட மாநாட்டில், வரவேற்புரை ஆற்றியபோது எடுக்கப்பட்டது. அண்ணா விழாப் பேருரையாற்ற, முத்தமிழறிஞர் கலைஞர் உள்ளிட்ட தலைவர்கள், அந்த மாநாட்டில் சிறப்புரையாற்றியுள்ளனர். அந்த மாநாட்டில்தான், கழக வேட்பாளர்களின் முதல் பட்டியல் வெளியிடப்பட்டதாம். கழகம் ஆட்சியைப் பிடிப்பதற்குத் திருப்புமுனை தந்த மாநாட்டில் என் தாத்தா அவர்கள் உரையாற்றியது, மூன்றாவது தலைமுறை கழகப் பற்றாளராகப் பெருமைகொள்கிறேன்.

– சூர்யா ராஜகோபால்,
பழனி – பண்ணைக்காடு,
வத்தலகுண்டு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### இரும்பை தனியார் வெட்டிக்கொள்ளட்டும்!

1957-ஆம் ஆண்டு, “சேலத்தில் இரும்பு ஆலை அமைக்க, அரசு முன்வருமா?” என்று ஒன்றிய அமைச்சர் மாளவியாவிடம் மக்களவையில் எழுப்பிய கேள்விக்கு,“அங்கு மாக்னசைட் ஏராளமாகக் கிடைக்கும் எனத் தெரிந்தால்தான், வெட்டி எடுக்க முன்வருவோம். இல்லையென்றால், தனிப்பட்டவர்கள் தோண்டி எடுத்து விற்க அனுமதிக்கப்படுவர்” என்று பதில் அளித்தார். ‘தி.மு.க., சேலத்தில் உருக்காலை அமைக்க வேண்டும்’ என வலியுறுத்திவந்த நிலையில், மாளவியாவின் பதிலுக்கு ‘திராவிட நாடு’ இதழில், கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900